ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2111/4 - 2019 පෙබරවාරි මස 18 වැනි සඳුදා - 2019.02.18

*2111/4 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டு சேவைப் பிரமாணம் - திருத்தங்கள் இல. 4

*2016, ஓகத்து மாதம் 23 ஆந் திகதிய 1981/43 ஆம் இலக்க, 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆந் திகதிய 1892/40 ஆம் இலக்க, மற்றும் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதிய 1893/39 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகள் மூலம் திருத்தஞ் செய்யப்பட்ட 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதிய 1816/12 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சீட்டு சேவைப் பிரமாணக் கோவையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தங்களை மேற்கொள்ள அரச சேவை ஆணைக்குழு கட்டளையிட்டுள்ளது.*

*அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,*

*எம். ஏ. பி. தயா செனெரத்,*
*செயலாளர்,*
*அரச சேவை ஆணைக்குழு.*

*2018, யூன் 05.*

(i) *15.4 என்ற பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள புதிய பந்தி பதிலிடப்படுகின்றது:-*

*15.4 இந்த சேவைப் பிரமாணம் அங்கீகாரம் பெற்று ஏழு (7) வருடங்கள் வரை பிரமாணத்தில் 9ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள எதிர்ப்படி கல்லச்சு இயந்திர இயக்குநர் (Letter Press) மற்றும் அச்சீட்டு நிறைவேற்றுநர், அச்சுக்கு முன் திட்டமிடலாளர், அச்சீட்டு பதிப்பாசிரியர்கள், கணினி தட்டச்சுக் கோர்ப்பாளர்கள் மற்றும் அச்சீட்டு வடிவமைப்பாளர்கள் (Designer for print) பதவிகளுக்காக தெரிவு செய்யப்படுகின்ற உள்வாரி விண்ணப்பதாரர்களுள் அச்சீட்டு நிறைவேற்றுநர் பதவிகளுக்காக தெரிவு செய்ததன் பின்னர் அரசாங்க அச்சக நிறுவகத்தினால் நடாத்தப்படும் புத்தகம் கட்டுதல் பற்றிய 6 மாதங்களுக்கு குறையாத பாடநெறியொன்றை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் எதிர்ப்படி கல்லச்சு இயந்திர இயக்குநர் (Letter Press) அச்சுக்கு முன் திட்டமிடலாளர், அச்சீட்டு பதிப்பாசிரியர், கணினி தட்டச்சு கோர்ப்பாளர் மற்றும் அச்சீட்டு வடிவமைப்பாளர் (Designer for print) பதவிக்கு தெரிவானதன் பின் திணைக்களத்தினால் நடாத்தப்படும் செய்முறை பரீட்சையில் சித்தி பெறுதல் என்பன இப் பதவிகளை நிரந்தரமாக்குவதற்கு போதுமான தகைமைகளாகும்.*

1A - G 29481 — 12 (2019/02)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும் இப் பந்தியின் கீழ் "ஓவ்செட் லித்தோ" அச்சீட்டு இயந்திர இயக்குநர் பதவிக்கு தெரிவு செய்யப்படுகின்ற உள்வாரி விண்ணப்பதாரர் தமது பதவி நிரந்தரமாக்கப்படுவதற்கு அரசாங்க அச்சக நிறுவகம் நடாத்தும் 6 மாதங்களுக்கு குறையாத "லித்தோ" பாடநெறியை பூர்த்தி செய்திருத்தல் போதுமானது. இந்த பிரமாணம் அங்கீகரிக்கப்பட்டு ஏழு (7) வருடங்களின் பின்னர் மேற்கூறப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்க்கையில் NVQ 5 ஆம் மட்டம் இருப்பின் இந்த பிரமாணத்தில் 10.3 பந்தியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைதல் வேண்டும்.

(ii) முதலாம் அத்தியாயத்தின் தொடர் இல. 6 இன் கீழ் பின்வருமாறு உபபிரிவொன்று உள்ளடக்கப்படுகின்றது.

6. (அ) பதவி உரித்தான துறைக்கு ஏற்ப தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 3 ஆம் மட்டத்தில் தொழில் தகைமையொன்றைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இந்த சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள க.பொ.த. (சா.த.) பரீட்சை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளாக கருதப்படுவர்.

(ஆ) பதவி உரித்தான துறைக்கு ஏற்ப தேசிய தொழில் தகைமைகள் (NVQ) 4 ஆம் மட்டத்தில் தொழில் தகைமையொன்றைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் இந்த சேவைப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள க.பொ.த. (உ.த.) பரீட்சை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரியாக கருதப்படுவர்.

**குறிப்பு**.-

மேற்குறிப்பிடப்பட்டுள்ள விதிகள், தேசிய தொழில் தகைமை மட்டம் ஒன்றை ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகைமை ஒன்றாகக் கொண்டுள்ள பதவிகளுக்கு மட்டுமே பொருத்தமானதாகும்.

*03-222*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.